[1978 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : உறுப்பினர் அவர்கள் சொன்ன தைப்போல வசதிகள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு நிறைய இருக்கிறது. அதற்கான வழிமுறைகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதற்கான யோசனைகளை உறுப்பினர் சொன்னால், ஏற்றுக் கொள்ளலாம்.

(பிற்பகல் 4-40)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் இப்போது 459 படுக்கைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் இதை விரிவாக்கும் திட்டமும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே இதைக் கிட்டத்தட்ட இரட்டிப் பாக்க, அதாவது சுமார் 2,000 படுக்கைகள் வரையாவது உயர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அதற்கான ஆய்வு நடை பெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. பி. மாணிக்கம்: மருத்துவ மனைகளில் மூட்டைப்பூச்சித் தொல்லையை ஒழிக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : மூட்டைப்பூச்சித் தொல்லையை ஒழிக்க மூட்டைப்பூச்சி ஒழிப்பு மருந்துகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

Iron Ore Dust

* 40 *Q*.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU D. V. D'MONTE) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representations from the residents of Royapuram on the spread of iron ore dust from the nearby harbour into their houses; and

(*b*) if so, the action taken to eliminate this health hazard?

1978 செப்டம்பர் 7]

இரும்புத் தாதுத் தூள்

திரு. க. அறிவழகன் (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராயபுரத்தில் வசிப்பவர்கள், அருகாமையிலுள்ள துறைமுகத்தி லிருந்து இரும்புத் தாதுத் தூள் தங்களது இல்லங்களுக்குப் பரவுவது குறித்துச் செய்துள்ள முறையீடுகள் எவையேனும் அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இந்த சுகாதாரக் கேட்டினை நீக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

(இ) 1978 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காற்றுத்தூய்மை கெடுதல் பற்றிய ஆய்வு நடத்தப்பட்டது. சுற்றுப்புறக்காற்றில் அனுமதிக்கத்தக்க அளவான 3 மீ/260 மைக்ரோ கிராமைவிட மேலாக தூசு கலந்திருப்பது கண்டறியப்பட்டது. எனவே, சென்னை துறைமுகத் தலைவரை தூசு தணிக்க காலதாமதமின்றி உடனடியாக விளக்கெண்ணெ, மற்றும் தண்ணீர் தெளிப்பு முறைகளை ஏற்படுத்தவும், இரும்புக் கனிப் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு மூடிய கலங்களைப் பயன்படுத்தவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. துறைமுகக் கழகமானது, இரும்புக்கனிகளை பல இடங்களில் ஏற்றி இறக்குவதால் உண்டாகும், இரும்புத்தூள் கலந்த காற்று பரவுவதைத் தடுக்க தண்ணீர் தெளிக்கிறது. வெளிநாட்டு வியாபாரிகள் விரும்பும் வகையில் இரும்பு கனியின் தன்மை மாருதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு மேலே சொன்ன பணியினை கையாளுகிறது.

திரு. க. அறிவழகன் : இராயபுரத்தில் வசிப்பவர்கள், துறைமுகத்தி லிருந்து பரவுகிற இரும்புத் தாதுத்தூள் காரணமாகப் பெரும் நோய்களுக்கு ஆட்படுகிறார்கள். அதற்குத் தடுப்பாகத் தண்ணீர் ஊற்றி, அந்த தூசி பரவாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட முயற்சிகள் தொடர்ந்து நடைபெறு கின்றனவா, தொடர்ந்து நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அது தொடர்ந்து நடைபெறும். மேலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமலிருப்பதற்கு துறைமுக அதிகாரி களால் தூசி இழுக்கும் இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரி விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அப்படிப்பட்ட இயந்திரம் நிறுவப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]